**OS.No.142/2019 P.W.1-பாண்டுரங்கன் 19.09.2025**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என் தகப்பனாருக்கு 3வது பிள்ளை. துரைசாமியின் மனைவி சாரதா எனது அக்கா. சாரதா தான் எனது வீட்டின் மூத்த பிள்ளை என்றால் சரிதான். சாரதாவிற்கு அடுத்தது மணி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதற்கு பிறகு வரதன் என்பவரும் இறந்து விட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கில் மேற்படி 3 நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இறந்துபோன 3 நபர்களுக்கும் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். என் முன் காட்டப்படும் 27.05.1996 தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. மேற்படி ஆவணத்தில் இருப்பது என் கையொப்பம் தான் என்றும், தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ளது எனது கையொப்பம் தான் என்பதை நிரூபிக்க தடய அறிவியல் துறைக்கு அனுப்புவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும்இல்லை. என் முன் காட்டப்படும் 11.05.2005 தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. என்முன் காட்டப்படும் வழக்குரையில் இருப்பது யாருடைய கையொப்பம் என்றால் என் கையொப்பத்தை போல தான் தெரிகிறது. 1996-ம் ஆண்டில் என் தம்பியிடமிருந்து ரூ.50,000/- வாங்கிக்கொண்டு எனது பாகத்தை எனது தம்பிக்கு விற்பதற்காக கிரய ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரியல்ல. 2005-ல் என் இரண்டு தம்பிகளுடன் சேர்ந்து முதல் பிரதிவாதிக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்முன் காட்டப்படும் வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தில் உள்ளது என் கையொப்பம் அல்ல. நான் இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து இன்றைய தேதியில் யார் பெயரில் உள்ளது என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. தாவா சொத்தில் வேறு எந்த வில்லங்கமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் எனது வழக்கில் 2018ம் ஆண்டில் போடப்பட்ட விடுதலை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தை குறித்து எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தை நான் எப்பொழுது பார்த்தேன் என்றால் என்றைக்கு பார்த்தேன் என்று நினைவில்லை. வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தை பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நான் தான் வாங்கி

வந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. என்னை ஏமாற்றி பத்திரம் பதிவு செய்துள்ளார்கள் என்பதை தெரிந்து நான் என்ன செய்தேன் என்றால் நீதிமன்றத்திற்கு வந்தேன். என் தம்பி என்னை ஏமாற்றியதாக சொல்லி தாம்பரம் காவல் ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் விசாரணை நடைபெற்றதா என்றால் எனக்கு தெரியாது. தற்போது சாட்சி தாம்பரம் காவல் நிலையத்திற்கு சென்றதாக கூறுகிறார். எதிர் தரப்பில் யார் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. யார் மீது புகார் கொடுத்தேன் என்று ஞாபகமில்லை.

**(சாட்சிக்கு உடல்நிலை சரியில்லாததால்' குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**